**வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் விஞ்ஞானத் துறை மற்றும் ஆங்கிலப் பாடம் ஆகியவற்றுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018**

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவிக்கு **இணைப்பு - 01** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இணைப்பு - 02** இல் காட்டப்பட்டவாறான குறித்த பாடங்களுக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்கு தகைமை உடையவர்களாவர். **இணைப்பு – 01** இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் **2018 நொவெம்பர் மாதம்** நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **09.11.2018** ஆகும்.

## 02. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை நிபந்தனைகள் :-

2.1 **1885 / 38**ம் இலக்க **2014.10.23**ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817 / 30** ஆம் இலக்க **2013.07.03**ம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் எதிர் காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் 3ம் வகுப்பு – 1(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 போட்டிப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பனவற்றின் மூலமாக நியமனத்திற்கு தகைமைபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2.3 இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

2.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது **08 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல்** வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

2.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01 / 2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **இணைப்பு – 01**இல் காட்டப்பபட்டவாறாகும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

இப் பதவிக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆசிரியர் ஒருவர் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து **03 / 2016** ஆம் இலக்க **2016.02.25** ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, **GE 1 - 2016** சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் **ரூபா 27,740 – 6 x 300 – 7 x 380 – 2 x 445 – 33,090** மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தில், **உப அட்டவணை I** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 14 ஆவது சம்பளப் படிநிலையான ரூபா **32,200/-** இல் அமர்த்தப்படுவர். எனினும் அவர்களுக்குரிய சம்பளம் **உப அட்டவணை II** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **ரூபா 25, 536/-** வழங்கப்படுவதுடன் சீராக்கற் படியாக ரூபா **3, 112/-** வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளையும் அவர்கள் பெற உரித்துடையவராவர்.

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். **(நேர்முகப் பரீட்சையின் போது கிராம சேவை அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிட்டு வழங்கப்படும் "தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளரின் விபரங்களை குறிப்பிட்டுக் கொள்வதற்காக வழங்கப்படும் படிவத்தினை" சமர்ப்பித்தல் வேண்டும்)**

04.3 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **21 வயதிற்கு குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள் :-

05.1 **1885 / 38**ம் இலக்க **2014.10.23**ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய **09.11.2018ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத் தகைமைச் சான்றிதழைப் (**இணைப்பு - 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு**) பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும் கோரப்பட்ட கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எதுவிதமான முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**அத்துடன்**

05.2 க.பொ.த (சா/த) பரீட்சையில் மொழியும் இலக்கியமும், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், சேவைப்பிரமாணக் குறிப்பு, தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். மேலும் இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் தகைமையுடைய விண்ணப்பங்கள் குறித்த பாடங்களுக்கு நிலவும் வெற்றிட எண்ணிக்கையினைவிடக் குறைவாக இருக்குமிடத்து இவ்விண்ணப்பதாரிகளுக்கான எழுத்துப் பரீட்சை நடாத்தப்படாது நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பன நடாத்தப்படும்.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நேர்முகத் தேர்வுக்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் பிரயோகப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்ற வேண்டும் இதற்குப் புள்ளிகள் வழங்கப்படும் விபரம் விளம்பரத்தின் பந்தி 12.2 இல் காட்டப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தவறும் சான்றுகள் தொடர்பில் பின்னர் கவனம் செலுத்தப்படமாட்டாது.

06.3 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய பரீட்சார்த்தி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் வேண்டப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா **500.00** ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் **3401** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையவை மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **09.11.2018** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"விஞ்ஞானத்துறை மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கு நிலவும் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – 1(அ) தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2018"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

08.3 விண்ணப்பதாரிகள் தமது தகைமைகளுக்கு ஏற்ப **பொருத்தமான பாடங்களுக்கு** (விளம்பரத்தின் **இணைப்பு – 02** இல் காட்டப்பட்ட பாடங்களுக்கு) மாத்திரம் விண்ணப்பிக்கும் போது **அப் பாடம் / பாடங்களைக் குறிப்பிட்டு ஒரேயொரு விண்ணப்பப்படிவத்தை** மாத்திரம் அனுப்பி வைத்தல் போதுமானது. விண்ணப்பதாரியினால் விண்ணப்பித்த பாடங்களுக்கு அமைவாகவே நியமனம் வழங்கப்படும். இப் பட்டதாரி **ஆசிரியர் சேவையின் போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் பாடம் / பாடங்கள்** பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தமது தகைமைக்கு ஏற்ப ஆகக்கூடிய **மூன்று (03)** பாடங்களை மட்டுமே முன்னுரிமை ஒழுங்கில் குறிப்பிட முடியும். எனினும் நியமனத்திற்குரிய பாடம் வெற்றிடங்களின் எண்ணிக்கையினைக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

08.4 விண்ணப்பப்படிவத்தின் **நிழற்படப் பிரதியை** தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது **விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார்** எனக்கருதப்படலாகாது.

08.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரியினுடைய விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

08.6 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அடடைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று (03) நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - **021 221 9939**, தொலைநகல் இல - **021 221 9940**)

**குறிப்பு :-**

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 09. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ

பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமா்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தா்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர்சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 395,520.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. பரீட்சைத் திட்டம் :-

இப்பரீட்சைகள் எழுத்துப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என இருபகுதிகளைக் கொண்டிருக்கும் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை என்பதனால் விண்ணப்பதாரிகள் இவ்வெழுத்துப் பரீட்சையினை தமிழ் மொழிமூலம் மாத்திரமே தோற்றமுடியும்.

### 12.1 எழுத்துப் பரீட்சை

இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றி சித்தி பெறத்தவறிய எந்தவொரு பரீட்சார்த்திக்கும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | பொது அறிவு | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக்கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினைப் பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத் தாள்களாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதனால் நேர்முகத் தேர்விற்குத் தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சாா்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

### 12.2 பிரயோகப் பரீட்சை

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01. நோக்கம் மற்றும் பிரவேசம் **(Objective and the Approach)** | 05 | 02 |
| 02. ஆளுமை மற்றும் நிர்வாகம் **(Personality and Voice Control)** | 05 | 02 |
| 03. தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் **(Clarity in the Communication)** | 05 | 02 |
| 04. நேர முகாமைத்துவம் **(Time Management)** | 05 | 02 |
| 05. சமர்ப்பிப்புத் திறமைகள் **(Usage of Techniques of Presentation)** | 05 | 02 |
| **மொத்தம்** | **25** | **10** |

**குறிப்பு :**
போட்டிப் பரீட்சையில் சித்திபெறும் பரீட்சார்த்திகளில் இருந்து, 1885/38 ஆம் இலக்க 2014.10.23ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டவாறான பிரயோகப் பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் அழைக்கப்படுவார்கள்.

## 13. பரீட்சைப் பெறுபேறுகள் :-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள், குறித்த ஆசிரியர் பதவிக்குரிய நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்பன நடைபெற்று நியமன அதிகாரியினால் நியமனத்திற்கான தெரிவுகள் இடம்பெற்றதன் பின்னர் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலமாக வெளியிடப்படும். அதேவேளை பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலமாக பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படும்.

## 14. பரீட்சை நிலையம் :-

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | **01** |
| மன்னார் | **02** |
| வவுனியா | **03** |
| கிளிநொச்சி | **04** |
| முல்லைத்தீவு | **05** |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை நிலையம் அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**15.** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு என்பதுடன் இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**16.** இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**அ.சிவபாலசுந்தரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
08.10.2018

## வலயக்கல்வி அலுவலக மட்டத்தில் பாடரீதியான வெற்றிடவிபரம்

( "--" என்ற அடையாளம் வெற்றிடங்கள் இல்லை என்பதைக் குறிக்கும்)

| இல | வலயம் | பாடங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இரசாயனவியல் | பௌதிகவியல் | விஞ்ஞானம் | கணிதம் | தகவல் தொழில்நுட்பமும் | ஆங்கிலம் | மொத்தம் |
| 01. | யாழ்ப்பாணம் | - | - | - | - | 12 | 4 | **16** |
| 02. | வலிகாமம் | - | - | 6 | 10 | 8 | 8 | **32** |
| 03. | வடமராட்சி | - | - | - | - | 15 | 4 | **19** |
| 04. | தென்மராட்சி | - | - | 5 | 10 | 9 | 5 | **29** |
| 05. | தீவகம் | 2 | 1 | 14 | 22 | - | 3 | **42** |
| 06. | கிளிநொச்சி | 2 | 1 | 34 | 36 | - | 5 | **78** |
| 07. | முல்லைத்தீவு | 2 | 1 | 16 | 17 | 3 | 2 | **41** |
| 08. | துணுக்காய் | 2 | 2 | 7 | 18 | - | 4 | **33** |
| 09. | வவுனியா வடக்கு | 1 | 1 | 20 | 16 | - | - | **38** |
| 10. | வவுனியா தெற்கு | 1 | 1 | 8 | 16 | 6 | - | **32** |
| 11. | மன்னார் | 1 | 1 | 22 | 33 | 4 | 5 | **66** |
| 12. | மடு | 1 | 1 | 5 | 6 | - | 1 | **14** |
| | **மொத்தம்** | **12** | **9** | **137** | **184** | **57** | **41** | **440** |

## பாட வகுதிகளும் அவற்றிற்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளும்

| பாட இலக்கம் | பாட வகுதி | தேவையான கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| **I** | பௌதிகவியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **பௌதிகவியல்** பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| **II** | இரசாயனவியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **இரசாயனவியல்** பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| **III** | விஞ்ஞானம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **உயிரியல் / இரசாயனவியல் / பௌதிகவியல்** பாடத்தைப் பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br><br>**அல்லது**<br><br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **உயிரியல் / உயிரியல் துறை சார்ந்த (விவசாயத்துறை சார்ந்த கற்கை / உணவும் போசாக்கும் போன்ற)** பாடத்தைப் பிரதான பாடங்களில் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| **IV** | கணிதம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **தூய கணிதம், பிரயோக கணிதம்** ஆகிய இரு பாடங்களினையும் பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| **V** | தகவல் தொழில்நுட்பம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுள்ள **தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம்** என்பவற்றுள் ஏதாவது ஒன்றை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞான இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| **VI** | ஆங்கிலம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **ஆங்கிலம்** பாடத்தை பிரதான பாடம் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலை இளமானிப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |